# ஈரோடு மாநகராட்சி

## மாமன்ற சிறப்புக் கூட்ட நடவடிக்கைகள்

## திருவள்ளுவராண்டு 2046 ஆனித் திங்கள் 28–ம் நாள்

2015–ம் ஆண்டு ஜூலை மாதம் 13–ஆம் தேதி (13.07.2015) திங்கட் கிழமை காலை 10.00 மணிக்கு மாமன்ற கூட்ட அரங்கில் நடைபெற்ற மாமன்ற சிறப்புக் கூட்ட நடவடிக்கைகள்.

*******

## கூட்ட நடவடிக்கைகள்

**1) மாண்புமிகு மேயர், மரியாதைக்குரிய துணைமேயர், மண்டலத் தலைவர்கள் மற்றும் மாமன்ற உறுப்பினர்களால் கொண்டு வரப்படும் நன்றித் தீர்மானங்கள்.**

5–வது முறையாக தமிழக முதலமைச்சராக பதவியேற்ற மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு இம்மாமன்றம் பாராட்டுகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றது.

ஆர்.கே.நகர் இடைத்தேர்தலில் மாபெரும் வரலாற்று சிறப்பு மிக்க வெற்றி பெற்ற மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு இம்மாமன்றம் மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றது. மேலும் ஆர்.கே. நகர் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் இம்மாமன்றம் நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றது.

சர்வதேச தரத்திற்கு இணையாக இந்தியாவில் 100 ஸ்மார்ட் நகரங்களை உருவாக்கவுள்ள மத்திய அரசின் ‘ஸ்மார்ட் சிட்டி’ (Smart City) திட்டத்தில் ஈரோடு மாநகராட்சியையும் சேர்க்க, தாயுள்ளத்துடன் பரிந்துரை செய்த மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி ‘அம்மா’ அவர்களுக்கு ஈரோடு மாமன்றம் பொதுமக்கள் சார்பாகவும் நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறது.

பேருந்து நிலையங்களில் காத்திருக்கும் வேளையில் தாய்மார்கள் தனது குழந்தைகளுக்கு தாய் பாலூட்ட தனி அறைகள் பேருந்து நிலையங்களில் அமைத்து உலகத் தாய்ப்பால் ஊட்டும் வாரமான ஆகஸ்டு–1–ந்தேதி முதல் துவங்கப்படும் என அறிவித்த மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு இம்மாமன்றம் பாராட்டுகளையும், நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறது.

**1. மாண்புமிகு மேயர் முன்மொழிய மரியாதைக்குரிய துணை மேயர் வழிமொழிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

2) சர்வதேச தரத்திற்கு இணையாக நகர்ப்புற உட்கட்டமைப்பு வசதிகளை மேம்பாடு செய்ய இந்தியாவில் 100 ஸ்மார்ட் நகரங்களை உருவாக்க மத்திய அரசால் ‘ஸ்மார்ட் சிட்டி’ (Smart City) திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. மேற்படி ‘ஸ்மார்ட் சிட்டி’ (Smart City) திட்டத்தின் வழிகாட்டு நெறிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு ஈரோடு மாநகராட்சியில் உட்கட்டமைப்பு பணிகள் மற்றும் புனரமைப்பு பணிகளை மேற்கொள்வதற்கு மாமன்றத்தின் இசைவினை தெரிவிக்க மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு–</u>

மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**இ1/5005/15**

**2. ஒப்புதல் வழங்கப்பட்டது.**

**இடம். ஈரோடு** **மேயர்,**

**நாள் 13.07.2015** **ஈரோடு மாநகராட்சி**